# போர்நிறுத்தகண்காணிப்புகுழுவில் வேலையில்லை குழுவை உடனடியாகக் கலைக்க வேண்டும்!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 29-11-85 வெள்ளி (கார்த்திகை 14 ரபியு அல் 16) முழக்கம் 294

## சென்னையில் 'முன்னணி' அறிவிப்பு

(சென்னை)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் பாதுகாப்புப்படைகளின் மேற்பார்வையிலேயே நடைபெறுவதாகவும், இதன் உறுப்பினர்கள் தங்கியுள்ள விடுதிகளை பாதுகாப்புப் படைகள் கண்காணித்து வருவதால் பொது மக்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதாகவும் ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய இப் பேச்சாளர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு முழு அளவில் பயனற்றதாக இருப்பதால் அதனை உடனடியாகக் கலைத்துவிட வேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தார். இது சம்பந்தமாக முன்னணி மத்திய அரசுடன் இன்னும் சில தினங்களில் விவாதிக்கும் எனவும் அப் பேச்சாளர் தெரிவித்தார். பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போதிலும் இப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்று தான் இருக்க முடியுமென இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது எனவும் அவர் கூறினார்.

★ நேற்று முன்தினம் நடைபெற்ற தேடுதல் வேட்டையில்

# மண்டூரில் 24; திருமலையில் 21 படையினரின் சூட்டுக்குப் பலி!

## வீடுகள் வாகனங்கள் தீமூட்டப்பட்டன; ஹெலிகப்டரிலிருந்து சரமாரியாக சூடு

(மட்டுநகர் திருமலை நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூர் கிராமத்தில் 24 பேரும் திருமலைப் பகுதியில் 21 பேருமாக மொத்தம் நாற்பத்தைந்து தமிழர்கள், தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட பௌத்த பிக்குவைத் தேடுதல் என்ற பெயரில் நேற்று முன்தினம் மண்டூர்க் கிராமத்தைச் சுற்றி வளைத்த ஆயுதப் படையினர் முற்பகல் முழுவதும் தேடுதலை நடத்திவிட்டு, பிற்பகலளவில் ஹெலிகப்டரிலிருந்து துப்பாக்கி வேட்டுகளை சரமாரியாகத் தீர்த்தனராம்.

மொத்தம் 24 பேர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடங்கியதாக இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். இரண்டு வீடுகளும், ட்ராக்டர், லெறி உட்பட பல வாகனங்களும் தீக்கிரையானதாகத் தெரிய வந்துள்ளது.

...6ஆம் பக்கம் பார்க்க

## மூதூரில் ஒன்பதுபேர் கொலை பத்துப் பேர் கைதாகினர்

(திருமலை)

மூதூரில் கட்டைபறிச்சான் கூனிதீவு, சம்பூர் கிராமங்களில் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இராணுவம், கடற்படை, ஊர்காவலபடை ஆகிய மூன்றும் இணைந்து இத் தேடுதலை நடத்தின.

இங்கு நேற்றுக் காலை ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். வயலில் வேலை செய்து கொண்டிருந்த பத்துப் பேர் கைதானதாகவும் தெரிய வந்துள்ளது.

இருவர் மக்கள் முன் நிறுத்தப்பட்டனர்

## இளைஞன் கொலை எதிரொலி சுன்னாகத்தில் நேற்றும் தடை

(உடுவில் நிருபர் சி. சந்தானகுமாரன்)

கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகம் பொது நூல் நிலையத்தடியைச் சேர்ந்த நடராசா குமரேசன் (22) என்பவரை உளவாளி எனச் சந்தேகித்து அடித்துக் கொலை செய்ததன் எதிரொலியாக நேற்று அவ்விடத்தைச் சேர்ந்த பொது மக்கள் சுன்னாகம் கே. கே. எஸ். வீதியில் தடைகளைப் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொலை செய்தவர்கள் வசித்து வந்த இருப்பிடத்தை மக்கள் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட குழுவுடன் தொடர்பு கொண்டு கொலை செய்த நபர்களை மக்கள் நிறுத்த வேண்டுமென விடாப்பிடியாக நின்றதனால் அவ்விருவரும் கொண்டுவரப்பட்டு மக்கள் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

... 6ஆம் பக்கம் பார்க்க

### ஈழமுரசு தொலைபேசி 'அவுட்' இன்று 20வது நாள்

ஈழமுரசு தொலைபேசி பழுதடைந்து இன்றுடன் இருபது

...6 ஆம் பக்கம் பார்க்க

சந்திரஹாஸன் தகவல்:

## வெளிநாட்டு கடன் பெறவே யுத்த நிறுத்தம் அமுலானது

(சென்னை)

வெளிநாடுகளிடமிருந்து நாற்பத்தெட்டுக் கோடி ரூபாவை உதவியாகப் பெறுவதற்கான ஒரு தந்திரமாகவே இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் போராளிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது என்று திரு சந்திரஹாசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான உதவியை அளிப்பதற்கு வெளிநாடுகள் உறுதியளித்தவுடன் பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்

—6ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் லலித் வெளியிட்ட தகவல்:

## ஜே.வி.பி.யிலிருந்துபிரிந்தோர் புளொட்டில் இணைந்துள்ளனர்!

சிங்களப் பகுதிகளில் குழப்பங்களை ஏற்படுத்தி வடபகுதியிலிருந்து பாதுகாப்புப்படைகளை வாபஸ் பெறச்செய்யும் நோக்கத்துடன் ஜே. வி. பியிலிருந்துபிரிந்து சென்றசோஷலிஸ மக்கள் இயக்கமும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் இணைந்து செயற்படுகின்றன என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

பாதுகாப்பு, தேசியபந்தோ

...6ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றத்தில் நேற்று சரத் பேச்சு:

## தீவிரவாதத்துக்கு மாக்ஸிஸ உருக்கொடுக்க அரசாங்கம் முனைகின்றது!

(கொழும்பு)

''அரசாங்கம் தீவிரவாதத்திற்கு மார்க்ஸிஸ உருக்கொடுப்பதற்கு எத்தனித்து வருகின்றது'' என்று கலவானத் தொகுதி எம்.பி. திரு. சரத் முத்தேட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பேசுகையில் கூறினார்.

...6ஆம் பக்கம் பார்க்க



திருமலை வவுனியா ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்தவர்கள் யாழ்நகரில் ஊர்வலமொன்றை நேற்று முன்தினம் நடத்தினார்கள், தமிழ் மகளிர் அவை நடத்திய இவ் ஊர்வலத்தின் காட்சியை இங்கு காணலாம். (படம்: ஆனந்த்)

தமிழ்பகுதிகளில் கூடுதலாக விற்பனையாவது ஈழமுரசு

# சர்வதேச இளைஞர் ஆண்டின் மாணவருக்கான போட்டி

ச வதேச இளைஞர் ஆண்டு நிறைவுறுவதை முன்னிட்டு, இளைய தலைமுறையினரான மாணவரிடையே திறமையை வெளிக்கொணருமுகமாக நல்லூர்த் தொகுதி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம் பேச்சு, இசை, கட்டுரைப் போட்டிகளை நடாத்தி பரிசில் வழங்கத் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு துறையிலும் இரு பிரிவாக நடாத்தப்படும் இப் போட்டிகளில் பதினைந்து வயதிற்குட்பட்டவர்கள் கீழ்ப் பிரிவிலும் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் மேற் பிரிவிலும் தோற்றலாம்.

விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர் ஊடாகவோ அல்லது அதிபரின் அல்லது பெற்றோரின் ஒப்புதல் கையெழுத்துடன் நேராகவோ அனுப்பலாம்.

கீழ்ப் பிரிவு பேச்சுப்போட்டியில் கலந்துகொள்பவர்கள் பின்வரும் ஏதாவது ஒரு தலைப்பில் ஆறு நிமிடங்கள் பேச வேண்டும். 1. "கற்கை நன்றே" 2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமயத் தொண்டு 3 வாழ்வை வளம்படுத்த விஞ்ஞானம். 4. சுவாமி ஞானப்பிரகாசரின் சமயத் தொண்டு. 5. "அறஞ்செய்ய விரும்பு."

மேற் பிரிவு பேச்சுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் பின்வரும் ஏதாவது தலைப்பில் எட்டு நிமிடங்கள் உரையாற்ற வேண்டும். 1. தொலைக் காட்சிச் சேவையின் பலாபலன்கள். 2. சுவாமி விவேகானந்தர். 3 பாரதியாரின் தெய்வீகப் பாடல்கள். 4. "நான் ஒரு விஞ்ஞானியானல்" 5. ஆக்கத்திற்கு அணு சக்தி.

மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் முடிந்ததும் போட்டிகள் நடைபெறும் திகதி, இடம் என்பன அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி:- 1985-12-06. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- சு. இராசநாயகம், 784, பலாலி வீதி, திருநெல்வேலி.

## அகதிகளுக்கு பழ மரக்கன்று

(சுண்டுக்குளி)

கெற்பலி அகதிகள் குடியேற்றத் திட்ட வாசிகளுக்குப் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே நடராசா மூவாயிரம் ரூபா பெறுமதியான பழ மரக்கன்றுகளை வழங்கினர்.

கைதடி அகதிகள் முகாமிலிருந்த சுமார் 450 பேரைக் கொண்ட 61 அகதிக் குடும்பங்கள் கெற்பலி எனும் இடத்தில் குடியேற்றப்பட்டிருந்தனர்.

இந்த அகதிகள் குடியேற்றத் திட்டத்திற்கு விஜயம் செய்து அகதிக் குடும்பங்களுடன் அளவளாவிய பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் மா, பலா, முந்திரிகை, தோடை, மாதுளை முதலிய பழ மரக்கன்றுகளை அவர்களுக்கு வழங்கிய போது காலத்திற்கேற்ற பொருத்தமான பெறுமதி இதுவென அகதிகள் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## மோட்டார் சைக்கிள் பலவந்த பறிப்பு

(சங்கானை)

தெல்லிப்பளையைச் சேர்ந்த இருவர் குரும்பசிட்டி நண்பரின் மோட்டார் சைக்கிளில் அவசரமாக சங்கானை – பண்டத்தரிப்பு வீதியில் பிரயாணம் செய்கையில் தொட்டிலடிப் பகுதியில் சில இளைஞர்களால் வழிமறிக்கப்பட்டு பலாத்காரமாக அது கடத்தப்பட்டுள்ளது.

இது நண்பருடைய வாகனம் என பல தடவை கூறியும் அவ்விளைஞர்கள் அதை ஏற்க மறுத்து நின்ற வேளையில் பல மக்களும் கூடித் தடுக்க முனைந்தபோது "கவனம்" என எச்சரிக்கை செய்து அவர்கள் மோட்டார் சைக்கிளுடன் வேகமாக மறைந்தனராம்.

இச்சம்பவத்தை அறிந்து தீவிரவாத இயக்கம் ஒன்று புலன் விசாரணைமேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## விமரிசையுடன் சாயிபாபா ஜனனதினம்

(புலோலி)

பருத்தித்துறை, மந்திகை பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா சமித்தியில், சத்தியசாயிபாபாவின் 60ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்விமரிசையாக நடைபெற்றது.

அன்றையதினம், கரவெட்டி வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள அனாதைப் பிள்ளைகள், முதியோர்களுக்கு சாயிபாபா சமித்தியினரால் மதிய போசனமும்வழங்கப்பட்டது. மாலை சமித்தியில் விசேட பஜனைகளும் இடம் பெற்றன.

மந்திகை பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா சமித்தியிலிருந்து சமித்திச் செயலாளர் திரு எஸ். சேனாதிராஜா தலைமையில் சாயிபாபா பக்தர் கோஷ்டியொன்று இந்தியாவில் நடைபெறும் சத்திய சாயிபாபாவின் 60 ஆவது பிறந்த தினவிழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மின்கம்பங்கள் சீராகின

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் பெருமழையினாலும் புயற்காற்றினாலும் சரிந்துவிழுந்த மின்கம்பங்கள் தற்போது நிமிர்த்தப்பட்டு விட்டன. மீண்டும் மின்கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் தடைப்பட்டிருந்த மின்விநியோகம் மீண்டும் கிடைக்கவிருக்கிறது.




✱ மானிப்பாய் வடகிழக்கு ஜெயஜெளிபவன் சிவபாக்கியம் தம்பதியின் மகள் சோபிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✱ பண்டத்தரிப்பு நந்தகுமார் சோதி தம்பதியின் மகன் திலக் இன்று தனது ஏழாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி கிழக்கு தியாகராஜா கண்ணகி தம்பதியின் மகன் சாரூபன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுன்றார்.

✱ நல்லூர் கனகசிங்கம் சுவர்நேஸ்வரி தம்பதியின் மகள் சாலினி இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ இளவாலை விக்டர் யோசப் செல்வராணி தம்பதியின் மகன் அன்ரனிஸ் கமல்ராஜ் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ நல்லூர் பெனடிக்ற் சுசிலா தம்பதியின் மகன் கிரிசன் ஜோய் இன்று தனது நாலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி கிழக்கு, தலங்காவற் பிள்ளையார் கோவில் வீதி, பரமேஸ்வரன் சுபத்திராதேவி தம்பதியின் மகன் பாபு இன்று முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

### பிரதம கல்வியதிகாரி பேச்சு

## சீரிய சமூகம் தோன்ற கல்வி ஒழுக்கம் இணைதல் அவசியம்

(பண்டத்தரிப்பு)

"கல்வியுடன் ஒழுக்கத்தையும் ஊட்டுவதன் மூலமே ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்க முடியும். சமுதாயத்தினதும், நாட்டினதும் வளமும், வளர்ச்சியும் அந்நாட்டு மக்களது மனப்பாங்கிலும், சிந்தனை வளத்திலும், ஆக்க முயற்சி விருப்பிலும், பிறர்க்கு இடைஞ்சல் இன்றி வாழவேண்டும் என்பன போன்ற கோட்பாட்டிலுமே தங்கியுள்ளது. மாணவர்களுக்குக் கல்வியுடன் ஊட்டி ஒழுக்க சீலராக வளர்க்கும் பொறுப்பும், ஆற்றலும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களிலுமே தங்கியுள்ளது."

இவ்வாறு வடமாநில பிரதம கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகம்வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை தலைமையில் நடந்த பரிசளிப்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய சபாநாயகம், "இக்கல்லூரிக்கென ஒரு பாரம்பரியம் இருக்கின்றது. நல்ல ஆரோக்கியமான பண்பாடுகள் பேணப்படுவது பாடசாலை தன் சமுதாயத் தொண்டை உரிய முறையில் ஆற்ற வழிவகுக்கின்றது. பொதுப் பரீட்சைகள், போட்டிகளில் இக்கல்லூரி தனது பாரம்பரிய பெருமை குன்றாத வகையில் நல்ல பெறுபேறுகளை பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது' என்றார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா உரையாற்றுகையில், "இவ்வகை ஒரு வளர்முகநாடு முன்னேற்றமடைந்த நாட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளில் சிறந்ததை எமக்கு உகந்ததையே நாம் மேற்கொள்ள வேண்டும். தேவையான இடத்து திருத்தங்களும் மாற்றங்களும் செய்யலாம். அதுவே விவேகம். இதை விடுத்து எதற்கும் பயப்படுவது புத்தியாகாது" என்றார்.

## மூன்று மாணவர் சித்தி

யாழ். / எழுதுமட்டுவாள், அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த வ. மதியழகன், கு. கலைச்செல்வி, த. மோகனலோஷினி ஆகிய மூவரும் இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, இருவர் புலமைப் பரிசிலும், ஒருவர் தாம் விரும்பிய பாடசாலையையும் பெறவுள்ளார்கள்.

மேற்படி பாடசாலையில் 1986 ஆம்ஆண்டு தொடக்கம் வகுப்பு6(ஆண்டு 7) தொடங்கவும் கல்வி அதிபதியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

### கல்வி

I. C. M. A. செக்ஷன் A May, 1986 பரீட்சைக்கு பேதனை வகுப்புகள். சனி, ஞாயிறு, போயா தினங்களில். ஆரம்பம்: 1-12-85 காலை வன்னியசிங்கம் M Sc. (Econ) (Lond); B. Com. (Lond) வைரவர் கடாட்சம், பலாலி வீதி திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24424

### திட்டப்பரிசு பெறுபவர்

அங்கத்துவ நண்பர்களினுல் தெரிவுசெய்யப் பெற்று இம்மாதம் ரூபாய் ஓராயிரம் பரிசு பெறுவர் M. குருசாமி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை, தினசரி வருவாய்கள், அதிஷ்டம் ருதுசோபனம், திருமணம், பிரசவம் விபத்துக்கள், அந்தியகாலம் முதலியவற்றுக்குரிய ஏராளமான நன்கொடைகளும் கடன் வசதிகளும் ஒருங்கே அமைந்தது இத்திட்டம் விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்.

### வாடகைக்கு

வீடியோ / றேடியோ வாச்ரிப்பயர் போன்ற வியாபாரத்திற்குகந்த இடம் உடன் வாடகைக்குண்டு. தொடர்பு-மல்ரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டுவீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

### காணவில்லை

மணிப்பேர்ஸ், உணவு முத்திரை B கட்டை, 200 ரூபா தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள், B. ஆச்சிமுத்து மே/பா. பரமநாதன், அரசடி வீதி, நல்லூர் விலாசத்துக்கு அனுப்பவும்.

## ஆலயத்தில் திருட்டு

(சரசாலை)

தனங்கிளப்பு, கடற்கரைப் பெரும்படை அம்மன் கோவிலில் கதவு பிரிக்கப்பட்டு, மிகவும் பெறுமதியான வெள்ளிப் பொருட்கள் உருவங்கள், கண்மலர், சங்கிலி போன்ற சுமார் பத்தாயிரம் ரூபாபெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகிறது. இது சமீபத்தில் தனங்கிளப்பு கிராமத்தில் இடம்பெற்ற இரண்டாவது திருட்டாகும்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## அறிவித்தல்

ஈராக் பிரயாணத்திற்காக என்னிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் அல்லது புதிதாக ஜெட்டா செல்ல விரும்புபவர்கள் இருந்தால் நேரில் என்னை சந்திக்கவும் மேல் விபரம் நேரில்.

A. மகேந்திரன்

155, குருசோவீதி, யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டுப் பயணம்

குவைத்தில் துறைமுகத் தொழிலாளர்களுக்கான சம்பளம் இலங்கை ரூபா 7500/- பயண ஒழுங்குகளுக்கு கடவுச்சீட்டுடனும், 3புகைப்படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

க. டில்லன்துரை
மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு,
(வேம்படி)

## பட்டப்படிப்புகள் கல்லூரி

புதிய மாணவர்களை அனுமதித்தல் 1986/87

G. A. Q. B. A.
G. A. Q. B. Sc
FIRST IN LAWS
FIRST IN COMMERCE
I. A. B. I. A. A.
I. C. M. A CHARTERED TAMIL
B. COM. PI - I. D. P. M

ஆரம்பம் 1.12.85

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி; யாழ்ப்பாணம்.

# கல்வி ஒழுக்கத்தில் மாணவர், விழிப்புடன் இருக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் 23 ஆண்டுகள் உப அதிபராகச் சேவை செய்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. மார்க்கண்டுவுக்கு வித்தியாலய ஆசிரியரும்மாணவரும் சேவை நலம் பாராட்டு விழா நடத்தி கௌரவித்தனர்.

இதற்குத் தலைமை வகித்த அதிபர் திரு. மு. நல்லையா தனது உரையில், " தமது கடமைகளைச் சரிவரச் செய்யும் ஆசிரியர்களே மாணவரின் அன்பைப் பெற முடியும். கடமை நேரத்துக்கு அப்பாலும் தமது தொழில் பற்றிச் சிந்திக்கும் ஆசிரியரே மாணவர் நலனில் அக்கறையுடையவர் திரு. க. மார்க்கண்டு ஆசிரியர் தமது செயலால் அனைவரது அன்புக்கும் பாத்திரமாயிருந்து நிர்வாகத்துக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் துணை நின்றார்' எனப் பாராட்டினார்.

மாணவருள்ளங்களில் விஷயங்களைப் பதிய வைப்பதில் அவர் வல்லவரென ஆசிரியர் திரு. ச. நவரத்தினம் பாராட்டினார். திருமதி ம. சுப்பிரமணியம் ஆசிரியை அவரின் பொறுப்புணர்வையும், திருமதி ச. தம்பிராசா ஆசிரியை அவரின் மனச்சாட்சிக்கு ஏற்ப நடக்கும் செயலையும் பாராட்டினர்.

திரு. க. மார்க்கண்டு தனது பதிலுரையில், 'அமைதியில்லாத இக்கால கட்டத்தில் மாணவர் தமது, கல்வியிலும் ஒழுக்கத்திலும் கண்ணும்கருத்துமாக இருக்காது விடின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக அமைந்துவிடும்'' என அறிவுறுத்தினார்.

மாணவரின் பாராட்டுரைகளும் கலை நிகழ்ச்சிகளும். இடம் பெற்றன. திரு. பொ சதானந்தம் ஆசிரியர் நன்றியுரை நிகழ்த்தினர்.

# அறிஞர்களை இங்கு அழைப்பதால் மட்டும் நாம் உயர்ந்துவிட முடியாது

## வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்

"புகழ் வாய்ந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், சமயத் தலைவர்கள் வருகை தந்த பெருமைக்குரியது இவ் வித்தியாலயம். கலை இலக்கிய விழாக்கள் பல இந்த மண்டபத்திலே நடைபெற்றிருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் கலாசார கேந்திரமாகத் திகழ்ந்த இவ்வித்தியாலயத்தை மீண்டும் அதே உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் எமது முயற்சிக்கு இப்போதைய மாணவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது வெளியிலே இருந்து அறிஞர்களை வரவழைப்பதனால் மட்டும் நாம் உயர்ந்து விட முடியாது.

மாணவர்களும் கவிஞர்களாக, எழுத்தாளர்களாக, பேச்சாளர்களாக வரவேண்டும் என்ற இலட்சியத்துடன் அவற்றிற்கான பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். பயிற்சியில் ஈடுபடும் சந்தர்ப்பத்தைத் தமிழ்ப் பேரவை வழங்கும் '' என வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தமிழ்ப் பேரவை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்த அதிபர் திரு. சி. சிவசரவணபவன் குறிப்பிட்டார். தமிழ்ப் பேரவையின் செயற்றிட்டங்களைப் பற்றிப் பொறுப்பாசிரியர் அப்துல் ரஹீம் விளக்கினார். நடப்பு வருட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கு. உதயகுமாரன். துணைத் தலைவர்கள்: எஸ்; ஜோர்ஜ்; ச. செல்வமகள்; செயலாளர்; ம. நடேரா; துணைச் செயலாளர்; வை. ஜெயமுருகன்; பொருளாளர்: க. இளங்கோ.

"யாழோசை'' என்ற மாணவர் சஞ்சிகையை ஆண்டு தோறும் அச்சிட்டு வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# பரு. பிரஜைகள் குழுவிற்கு அலுவலகம் அவசியமானது

(புலோலி)

" பருத்தித்துறை பிரஜைகள் குழுவிற்கு அலுவலகம் ஒன்றில்லாதது பெருங்குறையாக இருக்கின்றது. இப்பிரஜைகள் குழுவிற்கு அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு பல கோரிக்கைகள் விடப்படும் இக்கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டு வருவது மிக வருத்தத்திற்குரியதாகும்.''

இவ்வாறு, பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தலைவரும் பருத்தித்துறை பிரஜைகள்குழு உறுப்பினருமான திரு. மு. பொ. வீரவாகு பிரஜைகள் குழு கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் பருத்தித்துறை பர்வதவர்த்தினி கலா மண்டபத்தில் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய திரு. வீரவாகு குறிப்பிட்டதாவது: பருத்தித்துறை பிரஜைகள் குழுவிற்கு அலுவலகமொன்றில்லாமையினால் பாதிப்படையும் பிரஜைகள் குழுத் தலைவர் உறுப்பினர்களின் வீடுகளைத் தேடி அலைய வேண்டியுள்ளது. இக் குறைபாடு இனிமேலாவது உடனடியாக நீக்கப்பட வேண்டும். கிராமங்கள் ரீதியாக பிரஜைகள் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் பிரஜைகள் குழுவின் நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டு பொது மக்களுக்கு உதவுவதென்று தீர்மானிக்கப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத்தீர்மானம் நடைமுறை படுத்தப்பட்டால் பாதிப்படையும் பொது மக்கள் இன்றையநிலையிலே பெரிதும் நன்மையடைவார்கள்.

அண்மையில் பருத்தித்துறையில் இராணுவத்தினர் மற் கொண்ட நடவடிக்கைகளின் போது பலர் காயமடைந்ததுடன் வியாபார ஸ்தாபனங்களும் சேதத்திற்குள்ளாகின. கண்காணிப்புக் குழுவுக்குப் புகார் செய்த பருத்தித்துறை பிரஜைகள் குழு வர்த்தகர்களின் இப்பாதிப்பு பற்றி புகார் செய்யாதது பெருங் கவலைக்குரியதாகும்'' என்றார்.

# கட்டுப்பாடுள்ள வாழ்க்கை இன்று மிக அவசியமாகிறது

(நல்லூர்)

"இக்காலத்தில் விடுதலை, சுதந்திரம் ஆகிய வார்த்தைகள் பரவலாக பல நோக்குடன் பாவிக்கப்படுகின்றன. விடுதலை: எவைகளிலிருந்து எந்த நோக்கங்களுக்காக விடுதலை? இவ்வினவிற்கு வெவ்வேறு விடைகளை ஒவ்வொருவரும் கொடுத்தாலும், எம்மைத் துன்புறுத்தும் இன்றைய அநேக எஜமான்களின் பிடியினுள் அகப்படாதிருக்க இக்கேள்வி அவசியமாகிறது.''

இவ்வாறு உலக வை. எம் சீ. ஏ. ஸ்தாபனமும், உலக வை. டபிள்யூ. சீ. ஏ. ஸ்தாபனமும் ஒன்றிணைந்து நடாத்தும் சர்வதேச ஜெபவாரத்தையொட்டிய நிகழ்ச்சிகளில் "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்ற தலைப்பிலான கருப்பொருளை மையமாக வைத்து ஜெபவாரத்தை நடாத்தும்படி உலக வை.எம்.சி. ஏ ஒன்றியத்தின் தலைவர் திரு. யேம்ஸ் லவ்வும், உலக வை. டபிள்யூ சீ. ஏ ஒன்றியத்தின் தலைவி எல். ஆர். நோத்ற் கொற்றும் கூட்டாக விடுத்திருக்கும் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வேண்டுகோளில், "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என இயேசு தம்மைவிசுவசித்தவர்களுக்கு தெளிவாகக் கூறியுள்ளார். ஆனாலும் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் தமது பாரம்பரிய சுதந்திரத்தின் பெருமையினால் தாம் யாருக்கு அல்லது எப்பொருளுக்கு அமைவாக உள்ளனர் என்பதைஆராய்ந்து உணர்ந்து கொள்ளவில்லை.

அதனால் அவரது வார்த்தையின் உட்கருத்தினையும் அவர்களால் கிரகிக்க முடியவில்லை ஆகவே கடவுளிடமிருந்துவரும் சத்தியத்திற்கு அவர்கள் குருடராகிப் பொய்யிலும், தீமையிலும் வேரூன்றிய ஆசைகளின் பின் செல்லுகின்றனர் என்பதையும் இயேசு திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இயேசுக்கிறிஸ்து எமக்கு இதனையே இன்றும் கூறுவாரா? அவரின் வார்த்தைக்கு திறந்த இருதயத்தோடும். சிந்தையோடும், செவி சாய்த்து அவர் எம்மிடம் எதிர்பார்ப்பதை நாம் நிறைவேற்றுகிறோம் என உண்மையில் கூறமுடியுமா? எம் செயல்கள் யாவும் அவரின் கற்பனைகளைப் பிரதிபலிக்கின்றனவா? இன்று கடந்த காலங்களைவிடக் கூடுதலான கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது என்பதில் சந்தேகமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் மலையகமக்கள் படும்பாடு வேதனைக்குரியது-இலங்கைஇந்தியகாங்கிரஸ்

(கொழும்பு)

கிளிநொச்சியில் மலையகத்தவர் நிலைகுறித்து இலங்கை-இந்திய காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"தென்இலங்கையின் பல பாகங்களில் இருந்து கடந்த கால கலவரங்களினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான இந்திய வம்சாவளி குடும்பங்கள் கிளிநொச்சியில் குடியேறியுள்ளன. தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக அங்கு நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. இதனால் அரசாங்கத்தின் உதவியோ, பாதுகாப்போ, போக்குவரத்து வசதிகளோ, அங்கு கிடையாது. முக்கியமாக மருத்துவ வசதிகளும் இல்லை.

மழைகாலங்களில் வெள்ளம், விவசாயஅழிவு வெய்யில் காலத்தில் வரட்சி, வாழ்க்கையின் இருள் சூழ்ந்து வாழும் அவர்களுக்கு இது நரக வாழ்க்கை தான். இதற்கிடையில் சிலர் இணக்க சபைகள் மக்கள் சபைகள் என்ற பெயரில் ஏதோ ஒன்றை அமைத்துக் கொண்டு அடாவடித்தனத்தில் இறங்கிவிட்டார்கள். கூலி வேலையோ, வியாபாரமோ செய்து அன்றாட பிழைப்புக்கு வழிதேடி வெளியூர் செல்லும் மக்களின் காணிகளை பிடுங்குதல் அவர்களின் வீடுகளில் வெளியாட்களை குடியமர்த்துதல் போன்ற நாச வேலைகளில் ஈடுபடுகின்றனர். இக் காரணத்தால் ஊர்மக்கள் மத்தியில் பிளவு உண்டாகி பிரச்சினைகள் தோன்றி தகராறுகள் உருவெடுக்கின்றன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இப்படிப்பட்ட சபைகள் தேவையென்றால் அவை அரசாங்க அதிபரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். அதே சமயம் காணிப்பிரச்சினைகள் மாவட்டக்காணி அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும். அதோடு சமூகப்பிரச்சினைகள் கிராம அபிவிருத்தி சபைகளின் கீழ் வரவேண்டும். தனிப்பட்ட குழுக்கள் சட்டத்தையும் அதிகாரத்தையும் கையில்எடுப்பது அழிவுப் பாதையில் இட்டுச்செல்லவே வழிவகுக்கும்.

கிளிநொச்சியிலேயே பெரிய கிராமம் பாரதிபுரமாகும். இங்கு இம்மாதிரியான அடாவடித்தனங்கள் நிறைய இடம் பெறுகின்றன. அங்குள்ள பல பொதுமக்கள் இம்மாதிரியான புகார்களை இலங்கை இந்திய காங்கிரஸ் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

## வன்னிப் பகுதியில் ஓர் சம்பவம்:

# முதியவர் முகமூடி கிழிந்தது மக்கள் அடைந்த ஆச்சரியம்

(ஒட்டுசுட்டான்)

முதியவர் ஒருவர் மக்களுடன் அன்னியோன்யமாகப் பழகியது சீருடையினருக்கு இரகசியத் தகவல் கொடுப்பதற்காகவா? இச் சந்தேகம் முள்ளியவளை, தண்ணியூற்றுப் பகுதிகளில் எழுந்தது.

இச் சம்பவம் குறித்து அறிய வருவதாவது: பிரஸ்தாபமுதியவர் வன்னிப் பகுதியில் நடமாடியவராயினும் அவர் அப் பகுதியைச் சேர்ந்தவரல்லர். மக்களுடன் நெருங்கிப் பழகுபவர். முள்ளியவளை இளைஞர்கள் இவரைச் சந்தேகத்தில் பிடித்து விசாரணை செய்தபோது அவர் சீருடையினருக்குத் தகவல் கொடுப்பவர் எனத் தெரிய வந்ததாம்.

அவரை இளைஞர்கள் மக்கள் முன் நிறுத்தி அவ்ராலேயே விஷயத்தைக் கக்க வைத்தபோது 'இவரா உளவாளி?' என மக்கள் வியப்படைந்தனராம்.


உ

ஓம் நமோ நாராயணாய

லோக ஷேமத்திற்கும்,

பக்தகோடிகளின் துயர் நீக்கத்திற்கும் பிரார்த்தனையாய்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கும்

பரிவார மூர்த்திகட்கும்

1.12.85 ஞாயிற்றுக்கிழமை காலை

சாந்திக மகா சங்காபிஷேகம்

பூர்வாங்க கிரியைகள் சனி மாலை 4.30 மணிக்கும், மஹாயாக ஹோம பூசைகள் ஞாயிறு காலை 8 மணிக்கும், அபிஷேக ஆராதனை காலை 10.30 மணியளவிலும் ஆரம்பமாகும்.

அடியவர் அனைவரும் இப்புண்ணிய வேளைகளில்
பெருமாளைத் தரிசித்து உய்தி பெறுவார்களாக!

குறிப்பு: அபிஷேக திரவியம் முதலியன கொடுக்க விரும்பும் அடியார்கள் ஞாயிறு காலை 7 மணிக்கும் 9 மணிக்குமிடையில் தேவஸ்தான காரியாலயத்தில் அவற்றை ஒப்படைக்கலாம்.

தேவஸ்தான தர்மகர்த்தாகள்

பிரசுரம்: V. K. இராசரத்தினம், 95 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்



வெளிநாட்டு பிரயாணம்

கட்டாரிற்கு, மேசன், தச்சர், கூலியாட்கள் போன்றோரின் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். 30-11-85ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ஷாயி ஷீபாஸ் ஏஜென்சீஸ்

ஷாயி ஷீபா ஆத்ம ஆரோக்கிய நிலையம்,
48, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
(வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்)

உதய சிந்தனை

நசுக்கப்பட்டவர்களுக்காக உழைப்பவன் தான் ஆண்டவனின் பார்வையில் பெரியவன்: மகாத்மா

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

29-11-85 வெள்ளிக்கிழமை (குரோதன கார்த்திகை-14)

# அகதி நிலையும் அனாதை நிலையும்

மன்னார், வவுனியா, திருமலை ஆகிய தமிழர் பிரதேசங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டு வெளியேற்றப் பட்டதால் அவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளமை பற்றி இங்கு பல தடவை குறிப்பிட்டுள்ளோம்.

சொந்த மண்ணிலேயே தமிழர்கள் அனாதைகளாக்கப்பட்டு வரும் அக்கிரமத்தைத் தட்டிக்கேட்க ஆளில்லாத நிலைமை இன்றைய ஆட்சியில் உருவாகியுள்ளது.

''தனிச் சிங்களம்'' பேசி வந்த மகரகம எம். பி, திரு. தினேஷ் குணவர்த்தன கூட பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகள் இல்லாத குறையை வன்மையாகச் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

வடக்குக் கிழக்கிலிருந்து தமிழ் எம். பீக்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காததால் தமிழ் மக்களின் சேவைகள் குறைபாடுகளை எடுத்துக் கூற எவருமில்லையே என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர் தாயகங்களில் பாராளுமன்ற ஆசனம், மாவட்டசபை உள்ளூராட்சி சபைகளின் ஆசனங்கள் வருடக் கணக்கில் காலியாக விருப்பதையும் தினேஷ் குணவர்த்தன எடுத்துக் கூறியுள்ளார்.

''தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். அடித்துத் துரத்தப்பட்டு துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு அகதிகளாக்கப் படுகிறார்கள். இவர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாதா?'' என்று கலவான தொகுதி எம். பி. சரத்முத்தட்டுவேகம பாராளுமன்றத்தில் குரல்எழுப்பியுள்ளார்.

''தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போகின்றீர்களா அல்லது இராணுவத்தீர்வு காணப்போகின்றீர்களா? என்பதைப் பகிரங்கமாகத் தெரிவியுங்கள்'' என்றும் சரத் நேரடியாகக் கேட்டுள்ளார்.

''தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நான் விரும்பவில்லை. அதனால் தான் சிங்களக் குடியேற்றங்களுக்கென புதிய வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கவில்லை என்று தன்புகழ் பாடியுள்ளார் நிதி அமைச்சர் ரொனி டி மெல்.

ஆனால் ''உள் நாட்டு யுத்தத்துக்கு'' பாதுகாப்பு என்ற பெயரில் அறு நூறு கோடி ரூபா ஒதுக்கியதைப் பற்றி எந்த விளக்கமும் அவரால் கொடுக்க முடியாது.

பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில்அப்பாவித் தமிழர்களை ''கூண்டோடு கைலாசம்'' அனுப்புவதற்குத் தான் அறு நூறு கோடி ரூபாவும் செலவிடப்படு மென்பதை அனைவரும் நன்கறிவர்.

1986 ம் ஆண்டு முடிவுக்குள் இனப் பிரச்சினையைத் தீர்க்காவிடில் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் அழிவது நிச்சயம் ன்று எதிர்காலச் சோதிடம் கூறியுள்ளார் அமைச்சர் காமினி யக்கா.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதானால் இந்தியாவிலுள்ளது போன்ற சுயாட்சி அமைப்பை ஏன் வழங்கக் கூடாது என்று கேட்ட காலித்தொகுதி எம். பீ கலாநிதி தகநாயக்காவின் பேச்சு கடலில் வீசப்பட்ட கல்லாக அமுக்கப்பட்டுவிட்டது.

பாராளுமன்றத்தின் சம்பிரதாய பூர்வமான பேச்சுக்கள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மறுபுறம் தமிழர் மீதான தாக்குதல், கொலைகள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றது.

பௌத்தபிக்கு ஒருவரை காணவில்லை என்பதற்காக, இந்து மதகுரு ஒருவர் உட்பட பதினான்கு தமிழர் கிழக்கில் கடத்தப் பட்டனர்.

இவர்களைத் தமிழ் தீவிரவாதிகள் கோஷ்டியொன்றே கடத்தியதாக அரசாங்கத்தின் பிரசாரம் வேறு.

தீவிரவாதிகள் தேடுதல் என்ற பெயரில் களுவாஞ்சிக்குடி, கல்லாறு, மண்டூர் பகுதிகளில் கடந்த சில தினங்களாக இடம் பெற்று வரும் அப்பாவிகள் படுகொலைகளுக்குக் கணக்கில்லை.

இவர்கள் அனைவரும் கொல்லப்பட்ட பின்னர் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டப்படுகின்றனர்.

நேற்றுமுன்தினம் பொல்லநறுவையில் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்ட ஏழு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் எதனை எடுத்துக் காட்டுகின்றது?

பொது வீடுகளில் நடமாடக்கூட தமிழனுக்குச் சுதந்திரமில்லை; அவனது உயிருக்கு எவராலும் உத்தரவாதம் அளிக்க முடியாது என்பதையே இந்தச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழன் அகதிமட்டுமல்ல, அனாதையாகவும் ஆக்கப்பட்டு விட்டான்.

**ஸ்ரீமாவோ:** '' பௌத்த பிக்குகளின் நல்லாசி பெறாத எந்த உரையாடலும் வெற்றி பெறாது !''

# பிக்குகளின் ஆசீர்வாதம் 'திம்பு'வுக்கு கிடைக்கவில்லை!

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் (சிறீ. ல. சு. க. வின்) திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, சென்ற மாதம் முல்கிரிகல உப – தேர்தலின்போது இதே கருத்தை ஆணித்தரமாக வெளியிட்டார். ஒரு சிங்களத் தேர்தற் தொகுதியில் வெளிவந்த இக்கூற்று, ஆட்சி பீடம் அமர்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை நடுங்க வைத்து விட்டது. சிறீ. ல. சு. க. பிரசாரகர்களினது தாக்குதல்களின் இடையறா இலக்காக அகப்பட்டவை திம்புப் பேச்சுக்களே. கோழைகளின் நடவடிக்கையான திம்பு மாநாட்டிற்கு பௌத்த மகாசங்கம் எனப்படும் புத்தபிக்குமாரின் ஆசீர்வாதம் கிடைத்திருக்கவில்லை. 'சிங்கள பௌத்தர்களின் விதியை சில கிறீஸ்தவர்களும் இந்துக்களும் சேர்ந்து தீர்மானிக்கும் இவை எப்படிப்பட்ட பேச்சுவார்த்தைகள்?' என வினவும் சிறீ. ல. சு. க. பேச்சாளர் லக்ஷ்மன் ஜயக்கொடி, கட்சியின் உணர்ச்சிப் போக்கைச் சுருங்கப் பிரதிபலிக்கும் வகையில், 'சிங்கள பிக்குமாரின் நல்லாசிகள் அற்ற உரையாடல்கள் எவையேனும் வெற்றிகாண மாட்டா' என எடுத்தியம்பினார்.

இலங்கையின் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கிறீஸ்தவர் என்பதைப் பிரசாரம் செய்து வருகிறது சிறீ. ல. சு. க. இங்ஙனமாக, இனவாத, மதவாத அடிப்படையில் ஆதரவு திரட்டும் நாட்டத்தில் அக்கட்சியானது அஸ்கிரிய பௌத்த பீடாதிபதியின் ஆதரவை ஈட்டிக் கொண்டுள்ளது. இத்தீவின் விநோத வர்க்கமாகிய இரத்த வெறி பிடித்த பிக்குகளில் முன்னணி வகிப்பவர் இவரே. ஆளும் கட்சியான ஐ. தே. கட்சியினர் இது குறித்து மனதை அலைக்கழித்துக் கொள்வதில்லை. 'பாவம், சிங்களத்தின் பிந்திரன்வாலேக்கள்' என இம்மத குருமாரை ஜெயவர்த்தன விசுவாசிகள் அலட்சியம் செய்து விடுவர்.

இவை தவிரவும், இடது சாரிச் சார்பான பிற குழுக்களின் அறை கூவலையும் இலங்கை அரசு சமாளிக்க வேண்டி இருக்கிறது. சராசரிச் சிங்களவர் தமிழரை ஏழன மனப்பான்மையுடன் நோக்குவதுண்டு. இம்மனப்பான்மை துறந்த மேற்படி குழுக்கள் தற்போது பிசகாகிப் போய் விட்ட எல்லாவற்றுக்குமுரிய பழியை ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் மீதே சுமத்துகின்றனர். திரைப்பட நடிக நட்சத்திரமாகிய விஜேகுமார் ரணத்துங்க திருமதி பண்டாரநாயக்கவின் மருமகன் ஆவர். மாமியாரின் சிறீ. ல சு. க. வைவிட்டுப் பிரிந்து சென்ற ஒரு சிறு குழுவின் தலைவராகிய அவர், இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினையும், குறிப்பாக அதனை வழி நடத்தும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும், சாடும் விதத்தைச் சற்றுக் கவனிப்போம்.

'கொலைகளால் சோகமுறும் நாம், நிலைமையால் மகிழ்ச்சி அடைகிறோம். அதிகார பீடத்தில் ஒட்டிக் கொண்டிருக்க ஆற்றொணா நிலையில், இறுதிக் கட்ட எத்தனத்தில் ஜெயவர்தன ஈடுபட்டிருக்கிறார். இலங்கையின் ஜனாதிபதியாக அவர் யாழ்ப்பாணத்தில் வசிக்க இயலாதவராகவுள்ளார். அவர் ஜனாதிபதி அல்ல என்ற அக்கணமே கொழும்பிற்தானும் உயிர்பிழைக்க மாட்டார்.' இடதுசாரி நிலைக்கு அப்பாலான கருத்துக் கோணத்திலிருந்து அபிப்பிராயம் தெரிவிக்கும் பாங்கில், விஜேயகுமார் ரணத்துங்க, 'இன்று தமிழ் மக்கள் ஈடுபட்டிருப்பது ஓர் இனத்துக்கு இன சமரில் அல்ல. அத முதலாளித்துவத்திற்கு எதிரான ஒரு சமுதாயப் போராட்டம் ஆகும். இப்போராட்டத்தில் நாமும் அவர்கள் பக்கம் நிற்கிறோம்' என மேலும் உரைத்தார்

இடதுசாரி அறைகூவல் வெறும் மேடைப் பேச்சல்ல. அதனைவிடப் பாரதூரமானது அது. 1970 களின் ஆரம்பத்தில் இலங்கை அரசுக்கெதிரான தீவிரவாதக் கிளர்ச்சி ஒன்று இத்தீவின் தென்பாகத்தை அதிர வைத்தது. ('ஜே.வீ.பி.') ஜனதா விமுக்தி பெரமுன கட்சி இக்கிளர்ச்சியைத் தலைமைதாங்கி நடத்திற்று. ஜே. வீ. பி. 'எச்ச சொச்சங்கள்' இன்னமும் செயலூக்கமாக உள்ளன. குறித்தசில தமிழர் விடுதலை இயக்கங்களுடன் அவற்றுள் விசேடமாக 'புளொட்' டுடன் இவை தொடர்புடையன எனக் கூறப்படுகிறது. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பாகங்களில் நிலைமை உள்ளபடியாக மோசமாகும் பட்சத்தில் ஜே. வீ. பி. நடவடிக்கைகள் புத்துயிர்பெற்றெழும் குறிப்பிடத்தகு சாத்தியக் கூறொன்று தலைதூக்கும் எனச்சில இலங்கை அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அந்நாளைக் காண்பது ஜெயவர்த்தனவுக்கு இதமானதாக இருக்க முடியாது. அந்த அச்சம் சமாதான முயற்சிக்குத் தூண்டு கோலாக அமைதல் வேண்டும். அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் தமிழர் விடுதலைப் புரட்சியாளருடன் உரையாடுவதைத் தவிர இலங்கை அரசுக்கு வேறு வழி இல்லை.

தர்க்கபூர்வமாகக் கலாநிதி திருச்செல்வம் இதனை நிலைநாட்டுவதைப் பாருங்கள்: ''இலங்கைக்கும் பாரதத்தின் பஞ்சாப் மாநிலத்திற்கும் இடையில் அடிப்படை வேறுபாடொன்று இருக்கிறது. இலங்கைத் தீவில் சமாதானம் நிலைத்து நிற்க வேண்டுமானால் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்குமிடையே (கடும்பிடியாளர்களுக்கும் நடுநிலைமையாளர்களுக்குமிடையே) தரம் பிரித்து வித்தியாசம் பாராட்டுவது சாத்தியமல்ல. இலங்கை நிலைமையில் ஒரு லோங்கோவால் கிடையாது.'

அதே போல, பாரதத்தின் புதிய புயிவியலரசியல் கருத்தேற்புகளில் சுதந்திர, தன்னுதிக்கமுள்ள தமிழீழத்திற்கு இடமில்லை என்பதை, தமிழர் விடுதலைப் புரட்சியாளர்கள் ஐயமின்றி அறிந்துகொண்டனர் போலத் தெரிகிறது. இந்தியா புதிதாக ஏற்றுள்ள பாத்திரம் நேர்மையான ஒரு தரகர் அல்லது மத்தியஸ்தருடையது. இப்பாத்திரத்தைப் பாரதம் தொடர்ந்தும் ஏற்றுப் பணியாற்றினால் மாத்திரமே சமாதானம் சாத்தியமாகும், நிறைவேறும். இலங்கை அரசு ஒரு புறமும், தமிழர் விடுதலை போராளி இயக்கங்கள் மறு புறமுமாக, இருசாராருக்குமே சமாதானம் முன்போல மீண்டும் நிலைபெற்று விடுவது நன்மை பயக்கும் என்பது, சுத்தத் தர்க்கவாரியாக இதுவரை நிறுவப்பட்டுள்ளவாறு, வெளிப்படை.

சமாதானம் நிறுவும் முயற்சி சென்ற இரண்டு கிழமைகளுள் மேலும் முன்னேற்றம் கண்டது. பாரத வெளிநாட்டுறவுச் செயலாளர், ரமேஷ் பண்டாரி கொழும்புக்கு விஜயம் செய்தார். இப்பிரச்சினைத் தீர்வெத்தனமானது அல்லோலகல்லோலமாக முட்டுக்கட்டை நிலைக்கு வந்துள்ளமையை இந்தியா கண்டு கொண்டது. இச்சிக்கலினின்றும் விடுபடும் ஒரே ஒரு வழி, யுத்த இடை நிறுத்தம் ஏதாவதொரு விதத்தில் பாரபட்சம், அதாவது பக்கச் சார்பு, இல்லாமல் கண்காணிக்கப்படுவதுதான் என இந்தியாவுக்குத் தெரியவே, அத்தகைய ஓர் ஆலோசனையை இலங்கை அரசு ஏற்க வைக்கும் அளவிற்கு அவ்வரசாங்கத்தினை மனம்மாற்றுவதே விஜயத்தின் நோக்கமாயிற்று. பாக்கியவசமாக, இப்பேச்சுக்களில் இந்த யதார்த்த உணர்வு ஏற்பட்டுள்ளது.

தற்போதைக்கான பிரயத்தனம், தமிழரின் மனித இன உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதல்ல.

...5ம் பக்கம் பார்க்க

'இந்தியா ருடே' கட்டுரையின் மொழி பெயர்ப்பின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகின்றது.

★ டாக்கா மாநாடு குறித்து பங்களாதேஷ் நம்பிக்கை

# தெற்காசியப் பிராந்திய பொதுப் பிரச்சினைகள் தீர்வதற்கு பெரிதும் உதவும்!

(டாக்கா)

அடுத்த மாதம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ள தெற்காசியப் பிராந்திய நாடுகளின் மாநாட்டில் வறுமையை அகற்ற ஆக்கபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சர் திரு. சௌத்ரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். டாக்காவில் செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்:

"இப்பிராந்தியத்தில் காணும் பொதுப் பிரச்சினைகளும் இம்மாநாட்டின் மூலம் தீர்க்கப்படும் வாய்ப்பு உண்டாகும்" என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

இம் மாநாட்டில் பாரதம், பங்களாதேஷ், பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகள் கலந்து கொள்கின்றன.

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பாரதத்தின் சார்பிலும், ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கையின் சார்பிலும் இம் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

அவர்கள் இருவரும் சந்திக்கும்போது இலங்கை இனப் பிரச்சினை பற்றியும் விவாதிக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாடு அடுத்த மாதம் ஏழாம், எட்டாம் திகதிகளில் டாக்காவில் நடைபெறவுள்ளது.

பாரத ராஜதந்திரிகள் தாக்குதல்

## குற்றவாளிகளைகண்டுபிடிக்க பாக். அதிகாரிகள் தீவிரம்

(கராச்சி)

பாகிஸ்தானில் பாரத ராஜதந்திரிகள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றவாளிகளைத் தேடி ரயில் நிலையங்களிலும், விமான நிலையங்களிலும் பாகிஸ்தான் அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளனர்.

ஆஸ்பத்திரியிலிருந்து இவ்விரு அதிகாரிகளும் ஓரிரு தினங்களில் திரும்பிவிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது

கனடாவில் வசிக்கும் சீக்கியர்களே இவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ராஜதந்திரிகளுக்குத் தலையில் காயம் உண்டாகியிருந்தது.

கல்வி மந். அரங்கநாயகம் அறிவிப்பு:

## ஆசிரியர் பிரச்சினை; முதல்வர் உதாசீனம் செய்யவே இல்லை

(சென்னை)

"ஆசிரியர் பிரச்சினையை அமைச்சர்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்று முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஒரு போதும் கூறவில்லை" என்று தமிழ்நாடுகல்வியமைச்சர் திரு. சி. அரங்கநாயகம் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

"உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் முதலில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். பின்னர் அமைச்சரவை மட்டத்தில் ஆலோசனைகள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்றும் அவர் சொன்னார்.

"ஆசிரியர்கள் முதலமைச்சரின் ஆலோசனைப்படி செயற்பட்டால்தான் நன்மை கிடைக்கும்" என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஆசிரியர்கள் தமது பத்து அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்திப் பல வாரங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்ட பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்கள் கைதாகிச் சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## டில்லியில் தொழிலாளர் நலமாநாடு

(புதுடில்லி)

புதுடில்லியில் இரு நாட்கள் நடைபெற்ற தொழிலாளர் நலமாநாட்டில் எல்லா அம்சங்களும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இம் மாநாட்டில் நியமிக்கப்பட்டகுழு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நிலைமைகளை ஆராயும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஸிம்பாப்வே செயற்பாடு: தென்னாபிரிக்கா சீற்றம்

(ஜொஹனஸ்பேச்)

கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு தருவதை நிறுத்தாவிட்டால் ஸிம்பாப்வேக்குள் தனது துருப்புக்களை அனுப்பப் போவதாக தென்னாபிரிக்கா மிரட்டியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது

அணிசேரா நாடுகள் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள ஸிம்பாப்வே தென்னாபிரிக்கா மீது எதிர்ப்புணர்வுடன் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

பிக்குகளின் ...

... 4ம் பக்கத் தொடர்

இப்போதெனிலோ, பயன் தரும் யுத்த இடைநிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்துவதே போதிய ஒரு பெரும் சாதனையாகும். அத்துடன் அமையாது இப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வானது எவ்வளவுதான் எய்துதற்கு அரிதாக இருந்தாலுங்கூட, இந் நடைமுறைப் படுத்துதலானது அத்தீர்வுநோக்கிய, தீர்க்கமான, ஒரு முன்னடியெடுத்து வைத்தலையும் குறித்துநிற்கும்.

வியட்னாமிலிருந்து பிரதமர் ராஜீவ் செய்தி

## பிரதம குரு கொலை முயற்சி முழு நாடுமே கண்டிக்கிறது

(ஹனோய்)

"பொற்கோயில் பிரதம குரு சாஹிப்சிங் கொலை முயற்சியை முழுநாடுமே கண்டனம் செய்கிறது. அவர் விரைந்து நலம்பெற வாழ்த்துகிறேன்" என்று பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி பஞ்சாப் பொற்கோயில் பிரதம குரு கொலை முயற்சி குறித்து வியட்னாம் தலைநகர் ஹனோயில் இருந்து விடுத்துள்ள செய்தி ஒன்றில் கூறியுள்ளார்.

"இக்கொடிய செயலைக் கண்டிக்கிறோம், இதுசீக்கிய சமூகத்துக்கே அவமானம் அளிக்கும் செயல்" என்று பிரிட்டன் வாழ் பாரத மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, பிரதம குரு சுடப்பட்ட போது சூடுபட்டு மடிந்த அவரது மெய்க் காவலரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா கருணைத்தொகை வழங்க பஞ்சாப் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது

அவரது நெருங்கியஉறவினர் ஒருவருக்கு அரசாங்க உத்தியோகம் அளிக்கப்படும்என்றும் பஞ்சாப் அரசாங்கம் அறிவித்துள்ளது.

### 10 நபர்கள் கைது

பொற்கோயில் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாகப் பத்துச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தென்னாபிரிக்காமீது பின்லாந்து அரசும் பொருளாதாரத் தடை

(லண்டன்)

தென்னாபிரிக்காமீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவர பின்லாந்தும் முன்வந்துள்ளது.

அதற்கான சட்டமூலம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகநாடுகள் பலவும் தென்னாபிரிக்காமீது அதன் இனத்துவேஷப் போக்கைக் கண்டித்துப் பொருளாதாரத்தடைகளை விதித்துவருவது குறிப்பிடத்தக்கது.

## மதுரையில் உயர் நீதிமன்ற கிளை: மத்திய அரசு அனுமதி!

(புதுடில்லி)

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் நிறுவுவதற்கு மத்திய அரசு அங்கீகாரமளித்துள்ளது.

நாகர் கோவிலில் வைத்து மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் திரு அருணாசலம் தெரிவித்தார்.

இதன் மூலம் மதுரை வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது என்றும் அவர் சொன்னார்.

## அமைச்சர் பாராட்டு

(சென்னை)

மலேஷியத் தொழில்துறை அமைச்சர் ஹம்ஸா சென்னையில் ரயில் இணைப்புப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை குழு ஒன்று சகிதம் நேரில் பார்வையிட்டார்.

பாரதத்தவரின் பல்துறைப் பணிகளையும் மலேஷிய அமைச்சர் பாராட்டினார்.

## தொலைபேசி வசதி

(சென்னை)

இவ்வருடம் தமிழகத்திற்கு மேலும் 14,980 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

பாரதம் - வியட்னாம் கருத்து

## வல்லரசுகள் உச்சிமாநாடு சரியான நோக்கிலானது!

(ஹனோய்)

"சோவியத், அமெரிக்கத் தலைவர்களுக்கிடையிலான ஜெனீவா உச்சிமாநாடு சரியான நோக்கிலான நடவடிக்கை" என்று வியட்னாமும், பாரதமும் ஏகோபித்த கருத்து வெளியிட்டுள்ளன.

தற்போது பாரதப்பிரதமர் திரு ராஜீவ்காந்தி வியட்னாம் விஜயம்மேற்கொண்டுள்ளார்.

வியட்னாமும், பாரதமும் பொருளாதார ரீதியிலும் முனைப்பாக ஒத்துழைக்க உறுதிபூண்டுள்ளன.

Radio and Electronics
Engineering Course

Week end classes 6 months

Radio, Tape Recorders, Hi Fi Stereo Ampilifier, Radio Control, Transfomer Winding

பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும் இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியன் கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புக்குரிய தெளிவான

THEORY & PRACTICALS ம்
DIGITAL ELECTRONICS &
THEORY OF TELEVISION

* வெளிநாடு செல்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு
* சுய தொழில் விரும்புவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.
* எமது பழைய மாணவர்கள் பலர் கூட்டுத்தாபனங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

கட்டணம் ரூ. 1000
(தவணை முறையிலும் செலுத்தலாம்)

ஆசிரியர்: பிரபல விரிவுரையாளர்
E. கணபதிப்பிள்ளை

ஆரம்பம் 7-12-85
காலை 10.00 மணி

CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201

ஈழமுரசு

## பெண்களுக்கு 3 மாத பிரசவ லீவு இம் மாதம் முதல் அமுலாகிறது

(கொழும்பு)

அரசாங்க கூட்டுத்தாபன, தனியார் துறைகளைச் சேர்ந்த பெண் ஊழியர்கள் இம்மாதத்திலிருந்து மூன்று மாதகால பிரசவ லீவைப் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பாக தொழில் அமைச்சர் திரு. பீ. சி. இம்புலான பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதலாம் இரண்டாம் மகப்பேறுகளுக்கு மட்டுமே இம் மூன்றுமாத கால லீவைப் பெற்றுக் கொள்ளலாம். அதன் பின்னர் இப்போதுள்ளதைப் போன்ற ஆறுவார கால லீவை மட்டுமே அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரஜைகள் குழுச் செயலாளர் அறிவிப்பு;

# தமிழ் அகதிகள் பிரச்சினையை உலகம் முழுவதும் தெரியப்படுத்த வேண்டும்!

(ம. ரூபன்)

வவுனியா, திருகோணமலை. முல்லைத்தீவு, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களின் மாநாடு நேற்று பகல் பத்து மணியளவில் யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மகளிர் அவைத் தலைவி செல்வி குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திருமலை, வவுனியா, பாலமோட்டைக்குளம், திரியாய், கந்தளாய் ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாக வந்தவர்கள் தமக்கு நடந்த சம்பவங்களையும். இன்றைய நிலைமைகளையும் விபரமாக எடுத்துக் கூறினர்கள். சிலர் தற்போதுள்ள நிவாரண உதவிகள் போதாமை. மீண்டும் தாம் தமது சொந்த இடங்களுக்கு போவதாஞல் தகுந்த பாதுகாப்பும், இழப்புக்களின் நஷ்ட ஈடும் கிடைக்க வேண்டும் என்பன பற்றி பேசினர்.

வவுனியாப் பகுதிகளில் இருந்து வந்தவர்களுக்கு கடந்த இரு வாரங்களாக நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. இன்றைய நிலையில் அவர்கள் மீண்டும் திரும்பும் வரை இந்த உதவிகளை கிடைக்க ஆவன செய்யும்படி வேண்டப்பட்டது.

யாழ் - பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் பேசுகையில், இந்த அகதிகளின் பிரச்சினையை அரசுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் தெரியப் படுத்த தாம் முயற்சிப்பதாக கூறினர்.

தற்போதுள்ள நிலையில் இந்த அகதிகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட மக்கள் செய்துவரும் உதவிகளுக்கும், ஆதரவுக்கும் அகதிகள் நன்றி கூறினர்கள். தாம் மீண்டும் திரும்பிச் செல்லும் வரை தமக்கு உதவிகள் வழங்கும் படியும் அவர்கள் யாழ். மாவட்ட மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

மகளிர் அவையின் செயலாளர் செல்வி. கு. மஞ்சுளா, முகாமையாளர் என் வசந்தகுமார், த. நியூட்டன், இ. முருகையா ஆகியோரும் பேசினர்.

## பலப்பரீட்சைக்குத் தருணம் இதுவல்ல எங்கிறது ஈரோஸ்

"எம்மை எமது பிரதேசத்தில் வாழவிடு' 'ஸ்ரீ லங்கா அரசே எமது இழப்புகளை ஈடு செய்', 'உலக மக்களே எமக்கு உதவுங்கள்'' என்று கோஷமெழுப்பியவாறு மக்கள் ஸ்ரீ லங்கா அரசிற்கு எதிராக ஆக்ரோசமாகப் போராடி வரும் இவ்வேளையில், இந்த மக்களின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்கள் பலப் பரீட்சையில் இறங்குவது விவேகமான செயலாக இருக்க முடியாதுஎன்றுஈரோஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

"போர் நிறுத்த காலகட்டத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வரும் அரசாங்கம் எமது மக்களுக்கெதிரான யுத்தமொன்றை மேற்கொள்ள திட்டமிட்டுச் செயலாற்றிவரும் இன்றைய சூழ்நிலையில் எமக்கிடையிலான குறைந்தபட்ச உடன்பாடுகளை அவமதிக்கும் வகையில் சில இயக்கங்கள் செயற்பட்டு வருவது எமது மக்களைப் போலவே எமக்கும் வேதனை அளிக்கிறது'' எனவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

'பலப் பரீட்சை நடத்தும் தருணம் இதுவல்ல' என்ற தலைப்பில் இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தான்தோன்றித் தனமாக எடுக்கப்படும் தன்னிச்சையான முடிவுகளால் விடுதலைப் போராட்டம் பின்தள்ளப்படுவதோடு எமது இனத்தின் அழிவுக்கே வழிவகுக்கும் எனவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் லலித் சொல்கிருர்

## ஜனதிபதி அகிம்சை வழியில் சமாதான தீர்வுக்கு முயற்சி

(மீரிகம்)

'அஹிம்சா வழியில் சென்று கொண்டிருக்கும் ஜனதிபதியும், மக்களும் நாட்டில் தற்போது தோன்றியுள்ள பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணவே விரும்புகின்றனர்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

மீரிகமவில் நடைபெற்ற பௌத்த மத அனுஷ்டான நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

"சமாதானத் தீர்வை ஏற்றுக் கொள்வதற்குத் தீவிரவாதிகள் தயாராக இல்லையென்றால் நாட்டின் ஐக்கியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும் மக்களுக்கே இறுதியில் வெற்றிகிடைக்கும்'' என்றும் அவர் சொன்னர்.

## விடுதலைக் காளிக்கு..,!

வவுனியாவில் கொலை செய்யப்பட்ட தமது பிராந்தியத் தளபதி றேகனின் நினைவாக "விடுதலைக் காளிக்கு'' என்ற தலைப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. சுந்தரம்,தேவன், ஜெகன், மனேமாஸ்டர் வரிசையில் றேகனும் பலிவாங்கப்பட்டுள்ளதாக இப்பிரசுரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### மண்டூரில்...

"இராணுவத்துக்கும் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற மோதலில் 24 போராளிகள் கொல்லப்பட்டதாக'' அரசாங்கம் இது பற்றி விடுத்த அறிக்கையில்தெரிவித்துள்ளது,

இச்சம்பவத்தையடுத்து மண்டூர் பகுதி மக்கள் கல்லாறு பட்டிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனைப்பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். நேற்று மண்டூர் பகுதி சுடுகாடாகக் காட்சியளித்தது.

திருமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேடுதல் சம்பவமொன்றில் இருபத்தொரு தமிழர்கள் படையினரின் துப்பாக்கிக்கு இரையாகியுள்ளனர் மூதூர், சம்பூர் பகுதிகளில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

## பிரஜைகள் குழு பிரமுகரின் வாகனம் கடத்தப்பட்டது!

யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவினது முக்கியஸ்தரும், வடமராட்சி கைத்தொழிலாளர்கள் சம்மேளன அமைப்பாளரும். பல்வேறு சமூகசேவை ஸ்தாபனங்களின் பிரமுகருமான 'சீமா சில்க்' குணரத்தினம் அவர்களின் கார் கடந்த வெள்ளிக்கிழமை இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்த கைத்தொழிலாளர் புனரமைப்புக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த சமயம் இவரது 'டற்ஸன்' கார் மாட்டின் வீதியில் வைத்து ஆயுதம் தாங்கியவர்களால் கடத்தப்பட்டது.

இந்த வாகனமில்லாததால் பிரஜைகள் குழுவின் பல முக்கிய வேலைகள் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### ஜே. வி. பியிலிரு...

பஸ்து ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், சிங்களவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் சிங்களவர்களைக் கொலைசெய்து அங்குள்ள கட்டடங்களைத் தகர்ப்பதே இவர்களின் திட்டம் என்றூர்.

சோஷலிஸ மக்கள் இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கொடுத்த தகவல்கள் மூலம் மேலும் பலர் கைது செய்யப்பட வாய்ப்பு உண்டு எனவும்

### வெளிநாட்டு....

குத் தீர்வு காண்பதில் இலங்கை அரசு அக்கறை காட்ட மறுத்து விட்டதெனவும் சென்னையில் நேற்று செய்தி நிருபர்களிடம் திரு. சந்திரஹாசன் கூறினர்.

தமிழர்கள் ஏற்கனவே நிராகரித்து விட்டயோசனைகளையே அரசு மீண்டும் வலியுறுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

அமைச்சர் கூறினர்.

கண்டியில் நேற்று கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ஒன்று நிக்கவரெட்டிய பொலிஸ் நிலையத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்டதென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் புளொட்டுக்கும் இம் மக்கள் இயக்கத்திற்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரம் இருப்பதாகவும் கூறினர்.

### தீவிரவாதத்துக்கு....

''உண்மையில் பயங்கரவாதச் செயல்கள் வடக்கில் இடம்பெற்று வருகின்ற வேளையில் தென்பகுதியில் மக்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கிறேன்'' என்றும் அவர் சொன்னர்.

தங்கால எம்.பி ஜினதாஸ வீரசிங்க பேசுகையில், ''பொலிஸ் படைக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மத்துகம எம்.பி அனில் முனசிங்க பேசுகையில்,'' நாட்டில் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றது. பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் போதுமானவை அல்ல என்பதை இது எடுத்துக் காட்டுகின்றன'' என்று குறிப்பிட்டார்.

எஹலியகொட எம்.பி. டாக்டர் விமல் விச்கிரமசிங்க பேசுகையில், "பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை'' எனச் சொன்னர்.

''பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு அரசாங்கம் கூடுதலான பணத்தைச் செலவிட வேண்டும்'' என அவர் கேட்டுக் கொண்டார்.

மதவாச்சி எம்.பி. மைத்திரிபால சேனநாயகா பேசுகையில், ''அனுராதபுரம், வவுனியா மாவட்டங்களிலிருந்து வெளியேறிய அகதிகள் தத்தம் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்று கமச் செய்கையில் ஈடுபட விரும்புகின்றனர்'' எனச் சொன்னர்.

### இன்று....

நாட்களாகின்றன. எமது வாசகர்கள் 'ஈழமுரசு' அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்து ஏமாற்றமடைவதைத் தவிர்ப்பதற்காகவே இதனை அறியத்தருகின்றோம்.

### இளைஞன்....

ஆத்திரமடைந்த மக்கள் இருவரையும் தனித்தனியாக மின்கம்பங்களுடன் கட்டிவைத்து வைத்தனர். சிறிது நேரத்தில் வானில் வந்த சில இளைஞர்கள் கட்டப்பட்டிருந்த இருவரையும் வானில் ஏற்றிச் சென்றனர்.

இதனுல் நேற்று சுன்னுகம் பொதுச்சந்தை, தனியார் நிறுவனங்கள், அரச அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அளவெட்டியூடாக கீரிமலை செல்லும் மினிபஸ்கள் மருதனுமடத்திலும் திரும்பி உடுவில் டச் றேட் ஊடாக உடுவில் கந்தரோடைவீதியைஅடைந்து பின்கந்தரோடை சென்று பயணத்தைத் தொடர்ந்தன.

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி வன்னியசேகரம்

மல்லாகம்

திருமதி ஈஸ்வரி வன்னியசேகரம் 28.11-85 அன்று காலமானர். இவர் காலஞ் சென்ற Dr. C. M. வன்னியசேகரத்தின் அன்புமனைவியும் Prot. V. கருணைநாதன், சிவமணி, தவமணி, Dr. ஐங்கரன், இராணி, சிவநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும் கமலாவதி, காலஞ் சென்ற மாணிக்கம் நடராஜா, Dr. ஞானசுந்தரம், ஞானலக்ஷ்மி, ஆனந்தக்குமார் ஆகியோரின் மாமியாரும் சியாமளா, ரோகிணி, வன்னிக்குமார், அனுஷலா, அபிராமி, சிற்பரன், அபாரு ஆகியோரின் பேத்தியாரும் ஆவர்.

அன்னரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (30-11-85) 10-30 மணியளவில் அவரது மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## முக்கிய அறிவித்தல்

எமது பத்திரிகையின் இருபாலை நிருபராகக் கடமையாற்றிய க. இரத்தினராஜசிங்கம் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். எமது பத்திரிகையின் பெயரால் இவர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் பொறுப்பல்ல என்பதை அறியத்தருகின்றோம்.

ஈழமுரசு

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில்29-11-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; தொலைபேசி: 23336